22 DEC 2016

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

## இரண்டாம் வருட இரண்டாம் அரையாண்டிற்கான பொதுக் கலைமாணித் தேர்வு 2012/2013

## ED / S 2213 நிறுவன நடத்தையும், பயன்தருபாடசாலையும் (Organizational Behavior and Effective School)

நேரம் - 03 மணித்தியாலங்கள்

எவையேனும் நான்கு வினாக்களுக்கு விடையளிக்குக

---

அ. "நிறுவனமொன்றின் அபிவிருத்தி அதனுடைய நடத்தையால் தீர்மானிக்கப்படுகின்றது", என்பதிலிருந்து நீர் விளங்கிக்கொள்வது யாதென்பதனை ஹென்றி பயோலின் முகாமைத்துவ செயற்பாட்டுக்கட்டங்களை அடிப்படையாகக்கொண்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. பாடசாலையொன்றின் பயன்தரு தன்மைக்கு, சூழற்காரணிகள் அதிகளவில் தாக்கம் செலுத்துகின்றன. இதனை அதிபர் ஒருவர் SWOT ஆய்வு மூலம் எவ்வாறு நிவர்த்தி செய்வார் என்பதனை பொருத்தமான உதாரணங்கள் மூலம் எடுத்துக்காட்டுக.(13 புள்ளிகள்)

அ. "கல்வி அபிவிருத்தியில் கல்விசார் மாற்றங்களும், புத்தாக்கங்களும் அதிகளவான பங்களிப்பினை வகிக்கின்றன." அந்தவகையில் பாடசாலையில் மாற்றங்களை ஏற்படுத்தவேண்டிய அவசியத்தினையும் அதற்கான காரணங்களினையும் வரிசைப்படுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. பாடசாலையில் உள்ள வளங்களினைப் பயன்படுத்தி உச்ச அளவுப் பயனைப் பெறுவதே சிறந்த முகாமைத்துவமாகும். அந்தவகையில் வளங்களினை ஒதுக்கீடு செய்பவர்களும், வளங்களினைப் பகிர்ந்தளிப்பவர்களும் எவ்வாறான உத்திகளைக் கையாள வேண்டும் என்பதனை பகுப்பாய்வு செய்க.

(13 புள்ளிகள்)

அ. "ஆசிரியர்கள் கற்பிப்பவர்கள் மட்டுமல்ல முகாமையாளர்களாகவும், வழிகாட்டுபவர்களாகவும் காணப்படுகின்றனர்" இதன் மூலம் அவர்களுக்கு முன்னூட்டல்கள் வழங்கப்படவேண்டிய அவசியத்தினை ஆசிரிய அபிவிருத்தியோடு தொடர்புபடுத்தி விளக்குக.

(12 புள்ளிகள்)

ஆ. பாடசாலை முகாமைத்துவத்தில் ஒவ்வொரு செயற்பாடுகளும் கண்காணிக்கப்படும் போதுதான் அவை வலுப்பெறுகின்றன. எனவே அதிபர் ஒருவர் மேற்பார்வை செய்வதிலுள்ள குறைபாடுகளைக் களைந்து அதனை எவ்வாறு விருத்தி செய்வார் என்பதனை உமது பார்வையில் எடுத்துரைக்குக.

(13 புள்ளிகள்)

04. அ. பாடசாலையொன்று தனிமனித, சமூக, தொண்டர் ஸ்தாபனங்களின் பங்களிப்பினை எவ்வாறு பெற்றுக்கொள்ள வேண்டும், என்பதனைப் பாடசாலை அபிவிருத்தியோடு தொடர்புபடுத்தி விளக்குக. (12 புள்ளிகள்)

ஆ. இன்றைய நவீன கல்வித் தேவைகளை மாணவர்களுக்கு வலுவுள்ளதாக மாற்றியமைக்க பெற்றோர் கல்வி (Parental Education) முக்கியமானதாகக் கொள்ளப்படவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனைப் பாடசாலைக்கூடாக எவ்வாறு நடைமுறைப்படுத்தலாம் என்பதனைப் பரிசீலனை செய்க. (13 புள்ளிகள்)

05. அ. "இன்று அதிபர்களுக்குத் தமது பாடசாலை தொடர்பான அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன." இவ்வதிகாரப் பரவலாக்கங்கள் பாடசாலை அபிவிருத்தியில் செல்வாக்கு செலுத்துகின்றனவா? என்பதனைப் பாடசாலை மட்ட முகாமைத்துவம் (SBM) உருவாக்கப்பட்ட நோக்கத்தினை அடிப்படையாகக்கொண்டு ஆராய்க. (12 புள்ளிகள்)

ஆ. "கல்வியின் ஓடுபாதை" கலைத்திட்டம் எனப்படுகின்றது. இதனை அடிப்படையாகக்கொண்டு கலைத்திட்டமொன்றினை உருவாக்கும்போது அதிபர் எனும் வகையில் நீர் எவ்வாறான செயற்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பீர் என்பதனை முன்னுரிமை அடிப்படையில் விமர்சிக்குக? (13 புள்ளிகள்)

06. கீழ்வருவன தொடர்பாக சுருக்கமாக விளக்குக.

அ. பாடசாலையின் கல்வி முகாமைத்துவ தகவல் தொகுதி (EMIS) செயற்பாடுகள்.

ஆ. நிறுவனத்தின் வினைத்திறனும், நேரசூசியும்.

இ. கல்வித்திட்டமிடல் குறையறிதல் நுட்பம்.

ஈ. தீர்மானம் செய்வதில் உள்ள பிரச்சினைகள்.

உ. தலைமைத்துவத்திற்கும் முகாமைத்துவத்திற்குமான இடைவெளி.

(5 x 5 = 25 புள்ளிகள்)